**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், வலங்கைமான்.**

2026ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10 ம் நாள் வெள்ளிக்கிழமை

**அசல் வழக்கு எண். 06 /2021**

பிரதிவாதி தரப்பு சாட்சியாக DW. 1 ன் வாக்குமூலம் 1969ம் ஆண்டின் 44வது சட்ட ஏற்பாடின் படி திரு. P. ஜேசுபாலன், எம்.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், வலங்கைமான் அவர்களால் ஆணையிடப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | பிரகாஷ் | Father Name | : | மகாலிங்கம் |
| Village | : | மங்கலம் | Taluk | : | வலங்கைமான் |
| Age | : | 45 | Calling | : | இளநிலை உதவியாளர்- TNCSC |

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை -</u>

இவ்வழக்கின் வாதி எனது உறவினர் என்றால் சரிதான். வாதி இவ்வழக்கின் என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். எதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் வாதியின் வயலை நான் கார்வாரியாக 2013 முதல் வைத்துள்ளேன் என்று இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளார். வழக்கு சொத்தினை வாதி எப்போது கிரயம் பெற்றார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். 28.03.1994 ம் தேதி கிரயம் பெற்றார். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் 14.05.1996 ம் தேதியில் வாதி வழக்கு சொத்தினை கிரயம் பெற்றார் என்று கண்டுள்ளது என்றால் சரிதான். வழக்கு சொத்தை சுற்றிலும் எனது சொத்து அமைந்துள்ளது என்றால் வழக்கு சொத்தின் கிழக்கிலும் மேற்கிலும் எனது சொத்து அமைந்துள்ளது. வாதியின் குடும்பத்தை பற்றி முழு விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். வாதியின் உடன்பிறந்த சகோதரர்களின் பெயர் தெரியுமா என்றால் தெரியும். அவர்களது பெயர் என்னவென்றால் ராமலிங்கம், பவாணிசங்கர், சீனிவாசன்(இறந்துவிட்டார்), மற்றும்

வாதியின் சகோதரி அனுராதா ஆவார்கள். வாதி வீடு கட்டுவதற்காக வழக்கு சொத்தினை எங்களிடம் கிரய ஒப்பந்தம் செய்து கொண்டார் என்று சொல்வது தவறு என்றால் சரியல்ல. வாதியின் சகோதரர் ராமலிங்கம் மற்றும் சீனிவாசன் கொடுத்த தொகையில்தான் வாதி வீடு கட்டியுள்ளார் என்றால் சரியல்ல. வாதி வழக்கு சொத்தினை வலங்கைமான் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில் அடமானம் வைத்து பணம் பெற்றுள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வாதிக்கு தாவா சொத்தினை தவிற வேறு சொத்துக்கள் உள்ளது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். மேற்படி வேறு சொத்துக்கள் தாவா சொத்தின் அருகில் இல்லை என்றால் தாவா சொத்திலிருந்து 2 வயல் வடக்கே தள்ளி 3 வது வயலிலிருந்து மேற்கே வரிசையாக சுமார் 8 ஏக்கர் அளவில் வயல் உள்ளது. மேற்படி 8 ஏக்கர் அளவிலுள்ள வயல்களுக்கான ஆவணங்கள் பற்றிய விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். தாவா சொத்தானது தனியாக என் வயலுக்கு இடையே இருந்ததாலும் வாதி பணி நிமித்தமாக வெளியூர் செல்லவேண்டியிருந்ததாலும் கார்வரியாக செயல்பட மட்டும் வழக்கு சொத்தினை என்னிடம் கொடுத்திருந்தார் என்றால் சரியல்ல. எனது தந்தை பணம் கொடுத்து கிரயம் பெற்றார். நான் எனது நிரூபண வாக்குமூலத்தில் தாவா சொத்தினை எனது தந்தை வாதியிடம் கிரயம் பெறுவதற்கு அனுகியுள்ளார் என்று கண்டுள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையில் தாவா சொத்தினை எனது தந்தை வாதியிடம் கிரயம் பெறுவதற்கு அனுகியுள்ளார் என்று இல்லை என்றால் சரிதான். கடந்த 15.05.1996 ம் தேதிய கிரய ஒப்பந்த தொகை ரூ.43,200/- என்பது அன்றைய தேதியில் நிர்ணயம் செய்யப்பட்டதா என்றால் கிரய ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொண்ட நாளிற்கு முதல்நாள் நிர்ணயம் செய்யப்பட்டது. பி.வா.சா.3 ல் மேற்படி கிரய ஒப்பந்த தொகை கிரய ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொண்ட முதல்நாளில் நிர்ணயம் செய்யப்பட்டது என்று கண்டுள்ளதா என்றால் இல்லை. எனது நிரூபண வாக்குமூலத்தில் கிரயத்தொகையான ரூ.43,200/- முழுத்தொகையையும் 15.05.1996 க்கு முன் தேதியிலேயே பெற்றுக் கொண்டதாக உள்ளது என்றால் சரிதான். நிர்ணயம் செய்யப்படாத தொகையை முன்தேதியிலேயே பெற்றுக்கொண்டார் என்று எனது நிரூபண வாக்குமூலத்தில்

உள்ளது என்றால் இல்லை 15.05.1996 ல் தான் கிரய தொகையான ரூ.43,200/-ஐ பெற்றுக்கொண்டார். நான் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையில் கிரய தொகையான ரூ.43,200/-ஐ அன்றைய தினம் மற்றும் பல்வேறு தேதிகளில் வாதி வீடு கட்டுவதற்காக பெற்றுக்கொண்டார் என்று கண்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தானது 15.05.1996 அன்றே எனது தகப்பனாரின் அனுபவித்திற்கு வந்துள்ளது என்பதற்கு வேறு ஏதேனும் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். வழக்கு சொத்திற்கான வரி ரசீது, காப்பீடு செய்ததற்கான ஆவணம், வெள்ள நிவாரணம் பெற்றதற்கான ஆவணம் மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில் தாவா சொத்தை பொறுத்து விவசாயக் கடன் பெற்றதற்கான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன். பி.வா.சா.ஆ.2 - வரி கிஸ்தி ரசீது சுப்ரமணிய ஐயர் என்பவரின் பெயரில் உள்ளது என்றால் சரிதான். 2020 வரை சுப்ரமணிய ஐயர் பெயரில்தான் வழக்கு சொத்திற்கான பட்டா இருந்து வந்தது. பி.வா.சா.ஆ.4- தொடக்க கூட்டுறவு வேளாண்மை நில உடைமை பதிவேடு என்றால் சரிதான். அது 2017-2018 ஆண்டுக்கானது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.5 – வழக்கு சொத்திற்கான பட்டா எண்ணோ, புல எண்ணோ குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். அது 2021ம் ஆண்டுக்கானது என்றால் சரிதான். 1996 முதல் 2013 வரையிலான காலத்தில் தாவா சொத்தானது என் அனுபவத்திலும் எனது தகப்பனாரின் அனுபவத்திலும் இருந்ததற்கான ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. கிரய ஒப்பந்தத்தை நிறைவேற்ற கோரி எனது தகப்பனார் நீதிமன்றத்தில் வழக்கு ஏதும் தாக்கல் செய்துள்ளாரா என்றால் இல்லை. எனது தகப்பனார் காலத்திற்கு பிறகு நானும் மேற்படி கிரய ஒப்பந்தத்தை நிறைவேற்ற கோரி வழக்கு ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்தை பொறுத்து எவ்வித கிரய ஒப்பந்தமும் ஏற்படாததால் தான் நானும் எனது தந்தையும் மேற்படி கிரய ஒப்பந்தத்தை நிறைவேற்ற கோரி எவ்வித சட்ட நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.3 கிரய ஒப்பந்தமானது இவ்வழக்கிற்கு பின்னிட்டு என்னால் மோசடியாக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. இவ்வழக்கு தாக்கல் செய்யப்படுவதற்கு முன்பு கடந்த 08.10.2020 அன்று எனக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார்

என்றால் சரிதான். மேற்படி சட்ட அறிவிப்பிற்கு நான் பதில் எதுவும் அனுப்பவில்லை என்றால் சரியல்ல. அனுப்பியுள்ளேன். எந்த தேதியில் பதில் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் தேதி எனக்கு நியாபகமில்லை. மேற்படி பதில் அறிவிப்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு எனது தரப்பு ஆவணமாக குறியீடு செய்யப்பட்டுள்ளதா என்றால் குறியீடு செய்யப்பட்டுள்ளது. நான் அதுபோன்று எந்த பதில் அறிவுப்பும் அனுப்பவில்லை என்றாலும் அதனை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்து எனது தரப்பு ஆவணமாக குறியீடு செய்யப்படவில்லை என்றாலும் சரியல்ல. வாதிக்கு எதிராக இந்நீதிமன்றத்தில் கேவியட் மனு தாக்கல் செய்திருந்தேன் என்றால் சரிதான். மேற்படி கேவியட் மனு வாதி தரப்பில் வா.சா.ஆ.15 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். 2ம் பிரதிவாதியான எனது சகோதரருக்கும் சட்ட அறிவிப்பு அனுப்பப்பட்டது என்றால் சரிதான். 2ம் பிரதிவாதியும் சட்ட அறிவிப்புக்கு பதில் அறிவுப்பு அளிக்கவில்லை என்றால் நாங்கள் இருவரும் சேர்ந்துதான் பதில் அறிவிப்பு அனுப்பினோம். கடந்த 15.05.1996 ம் தேதிய கிரய ஒப்பந்தம் உண்மையானதாக இருந்திருந்தால் நாங்கள் பதில் அறிவிப்பில் அதனை குறிப்பிட்டு அனுப்பியிருப்போம் அவ்வாறு மேற்கூறிய கிரய ஒப்பந்தம் இல்லாததால்தான் நாங்கள் பதில் அறிவிப்பை அனுப்பவில்லை என்றால் சரியல்ல. நாங்கள் கோவில் இடத்தை அபகரித்து வைத்திருப்பதாக ஊர் பொதுமக்கள் எங்கள் மீது மாவட்ட ஆட்சியரிடம் புகார் அளித்துள்ளார்களா என்றால் ஊர் பொதுமக்கள் புகார் அளிக்கவில்லை, இவ்வழக்கின் வாதியும் அவருடன் சேர்ந்து மற்ற 5 நபர்களும் புகார் கொடுத்தார்கள். மேற்படி இடம் கோவில் இடம் இல்லை எங்களுக்கு சொந்தமான இடம். கோவில் இடம் மற்றும் உரிமை கோறாத பிற நபர்களின் இடங்களை ஆக்கிரமிப்பது எனது வழக்கம் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் வரி ரசீதுகள் வாதியின் அனுமதியின் பெயரில் பெறப்பட்டது என்றால் சரியல்ல. என்னிடம் வழக்கு சொத்திற்கான ஆவணங்கள் 1996 முதல் 2026 ம் ஆண்டு வரை உள்ளது. பி.வா.சா.ஆ.3 ல் காலவரையறை நிர்ணயம் செய்யவில்லை என்று கூறியுள்ளது நான் மேற்படி ஆவணத்தை இவ்வழக்கிற்கு பின்னிட்டு தயார் செய்துள்ளதால்தான் என்றால் சரியல்ல. கடந்த 2013ம் வருடத்தில்

வாதியிடமிருந்து தாவா சொத்தினை கார்வாரி என்ற முறையில் ஒப்புக்கொண்டு தற்போது சட்டத்திற்கு புறம்பாக உரிமை கோறுகிறேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கின் வாதி 15.05.1996 ம் தேதியிலோ அல்லது அதற்கு பின்போ எவ்வித ஆவணமும் செய்து கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தினை நான் சட்டத்திற்கு புறம்பாக அனுபவமும் உரிமையும் கோரி வருகிறேன் என்றால் சரியல்ல. ஆகையால் வாதி கோரியுள்ள பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதுதான் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை**

என்னால் சொல்லப்பட்டு என்னுடைய மேற்பார்வையில் என்னுடைய ஆணையின் கீழ் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு விளக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

JESU BALAN

Digitally signed by JESU BALAN
Date: 2026.04.10 14:46:39 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,
வலங்கைமான்.